

**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
**Website: www.mntfreeias.com**

# கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள்

## தாள் - I

**கால அளவு: மூன்று மணி நேரம்** **மொத்த மதிப்பெண்: 100**

### அலகு-1(அ)

**குறிப்பு: i) கொடுக்கப்பட்ட தமிழ் பகுதியை நன்கு படித்து கருத்து சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.**

(1 x 10 = 10)

1. **வாசிப்பு என்பது, ஓர் உன்னதமான தனி அனுபவம். சமூக அனுபவங்கள் கூட்டுதொகுப்பாக்க படைப்புகளில் வெளிப்படுகின்றன. அவற்றை வாசிக்கும் ஒரு வாசகன் தன் வாசிப்பின் ஊடாக ஒட்டுமொத்த சமூக அனுபவக்களத்திற்குள் பயணிக்க முடியும். இடம், காலம், மொழி கடந்த அந்த மானுட வாழ்வியல் பதிவுகளிலிருந்து தனக்கான உன்னதங்களை அவன் எடுத்துக் கொள்கிறான். ஆக, வாசிப்பு நிறைந்த ஒரு சமுதாயமே மரபின் பண்பாட்டுக் கூறுகளோடு இயைந்த ஒரு நவீனத்தைத் தகவமைத்துக்கொள்ள முடியும். வாசிப்பின் படிநிலைகள் இலக்கிய வாசிப்பு என்ற, ஒரே மையத்திலேயே எப்போதும் இயங்குவதில்லை. அது பல்வேறு வாசிப்புப் படிநிலைகளின் ஊடாகக் கடந்து கொண்டே இருக்கிறது. ஒரு நல்ல வாசகனின் வாசிப்புத்தரம் என்பது, குழந்தை இலக்கிய வாசிப்பிலிருந்து பொழுதுபோக்கு, சாகசம், குற்றவியல், மெல்லுணர்வு, இலட்சியவாதம் ஆகியவற்றின் வழியாகச் செவ்வியல் வாசிப்பை நோக்கிநாளும் வளர்ந்து கொண்டே செல்லும் தன்மையுடையது.**

### அலகு-1(ஆ)

**குறிப்பு: i) கொடுக்கப்பட்ட ஆங்கில பகுதியை நன்கு படித்து கருத்து சிதையாமல் தமிழில் மொழி பெயர்க்கவும்.**

(1 x 10 = 10)

2. In 1977, shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya, Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years, the movement has enabled many women to plant trees in their regions providing them with food, fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenya's first fully democratic elections in a generation. In the election, Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a

**Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She has transformend the lives of tens of thousands of women through sustainable social forestry schemes.**

**அலகு-2**

**குறிப்பு: i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை**

**(1 x 10 = 10)**

3. பெரியாரின் வாழ்க்கை, சமுதாயச் சீர்திருத்தத்திற்கான வரலாறாகும். சமயமற்ற, சாதிபேதமற்ற ஒரு சமத்துவச் சமுதாயமாக நாடு திகழவேண்டும் என்பதே பெரியாரின் குறிக்கோளாக இருந்தது. அவரது குறிக் கோள்களை நிறைவேற்ற, ஆட்சியில் பங்கேற்காமல் ஆட்சியாளர்களை இயக்கிய ஆளுமையாகத் திகழ்ந்தார். அவரின் கொள்கைகளை மக்களிடையே கொண்டுசேர்க்கப் பயன்பட்ட கருவிகள் இரண்டு; ஒன்று மேடைப்பேச்சு; மற்றொன்று எழுத்து. மேடைப்பேச்சு, அவரது நேரிடையான களப்பணிக்கு உதவியது. எழுத்து, அவரது கொள்கைகளை மிகப் பெரிய வீச்சில் மக்களிடையே கொண்டு சென்றது. தமது எழுத்துகளை வெளியிடத் தாமே இதழ்களைப் பொறுப்பேற்று நடத்தியதன்மூலம், அவர் ஒரு புரட்சிகரமான இதழாளராகவும் அறியப்படுகிறார். தமிழகத்தில் இதழ்களின் தாக்கத்தால் மக்களையும், தலைவர்களையும் ஒருங்கிணைத்ததில் பெரியாருடைய இதழ்ப்பணி முதன்மையானது. எதனையும் ஏன்? எதற்கு? எப்படி? என்று ஆய்வுக்கு உட்படுத்தும் பகுத்தறிவை மக்களிடம் வளர்ப்பதையே ஓர் இதழாளராக, பெரியார் தமது நோக்கமாகக் கொண்டிருந்தார்.

பெரியார், நாட்டின் சமூக, அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைப்பற்றி மிக விரிவான பரப்புரைகளை மேற்கொண்டார். அவரின் சுயமரியாதை, சமதருமம், பெண்ணுரிமை, வகுப்புரிமை போன்ற பரப்புரைகளை வெளியிட எந்த இதழும் முன்வரவில்லை. எனவே, தெளிவும் திட்பமும் உடைய நோக்கத் தினை மக்களிடையே கொண்டுசெல்லவேண்டும் என்று விரும்பிய பெரியார் நாளிதழ் ஒன்றைத் தொடங்க எண்ணினார். 1922இல் கோயம்புத்தூர் சிறையில் தம் நண்பர் தங்கப்பெருமாளோடு இருக்கும் போது, 'குடி அரசு' என்னும் பத்திரிகையைத் தொடங்க முடிவு செய்தார். அதன்படி 02.05.1925 முதல் 'குடி அரசு' வார இதழைத் தொடங்கினார்.

1935இல் நீதிக்கட்சிக்காக, வாரம் இருமுறை ஏடாகத் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தாரால் தொடங்கப்பட்ட 'விடுதலை', சிறிதுகாலம் கழித்து, பெரியாரின் பொறுப்பிற்குவந்தது. பின்னர், அது நாளிதழாக மாற்றம் பெற்றது. பெரியார் பல்வேறு இதழ்களில் பணியாற்றினாலும் 'குடி அரசு' இதழும், 'விடுதலை' இதழுமே அவரின் முழுமையான மனக்கருத்தை வெளிப்படுத்தின. தாம் பகுத்தறிந்து கண்டதைப் பிறருக்குச் சொல்லுதல், இதழ்களின் மூலம் கொள்கையை விளக்கி ஒத்த கருத்துடைய மக்களை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் குடி அரசு, விடுதலை இதழ்களில் எழுதி வந்தார். மேலும் புரட்சி, பகுத்தறிவு, ரிவோல்ட் (ஆங்கிலம்) ஆகிய இதழ்களையும் நடத்தினார். பெரியார் குடி அரசு, விடுதலை ஆகிய இதழ்களில் பெண் விடுதலை, இந்தியச் சமூக அமைப்பு, அதில் பிற்படுத்தப்பட்டோரின் நிலை, சுயமரியாதையோடு கூடிய அரசியல் சுதந்திரம், சமயம் சார்ந்த கருத்தாடல்கள், பொருளியல் கொள்கை போன்றவற்றை எழுதியதன் மூலம் மிகச்சிறந்த எழுத்தாளராகவும் அறியப்படுகிறார்.

உலகில் நடைமுறையில் உள்ள பெரும்பாலான மொழிகள் ஓசை, குறியீடு, வடிவம், எழுத்துகள் குறைப்பு, தேவையான எழுத்துகள் சேர்ப்பு ஆகிய செயல்களால் தொடர்ந்து மாறுதல் அடைந்து கொண்டே இருக்கின்றன. வளர்ந்து வரும் நவீன காலகட்டத்தின் தேவைக்கேற்பத் தமிழ் மொழியில் குறிப்பாக, அதன் எழுத்துருக்களில் மாற்றங்கள் தேவை என்று பெரியார் கருதினார். தமிழைக் கற்போர் மற்றும் பயன்படுத்துவோர்க்கு எளிமையாகவும் சுமை இல்லாமலும் எழுத்துருக்கள் இருக்கவேண்டும். மேலும் தமிழை

விரைவாகவும் வடிவ ஒழுங்கோடும் அச்சிடுவதற்கு எழுத்துருக்களில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையை அவர் வலியுறுத்தினார்.

**அலகு-3**

குறிப்பு: i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்.

(5 x 2 = 10)

4. கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும். சமணத்தைச் சேர்ந்த திகம்பரத் துறவிகள் மலைக் குகையில் தங்கினர். அவர்கள் தங்களின் தங்குமிடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குப் கற்பித்தனர். பள்ளி என்ற சொல்லுக்குப் படுக்கை என்று பொருள். அவர்களின் படுக்கைகளின் மீது மாணவர்கள் அமர்ந்து கற்றதனால் கல்விக்கூடம், பள்ளிக்கூடம் என அழைக்கப்படலாயிற்று. பள்ளி என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடையாகும். சமணப்பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுகைகள பற்றித் திருச்சி மலைக்கோட்டையிலும் தமிழகத்தின் புகழ் பெற்ற சமணக் குன்றான கழுகுமலையிலும் உள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

வந்தவாசி அருகிலுள்ள வேடல் என்னும் ஊரில் இருந்த சமணப் பள்ளியில் பெண் சமண ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார். பட்டினிக்குரத்தி என்னும் சமணப்பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளியொன்றை நிறுவியிருந்தார். இவை, சமணப் பள்ளிகளில் பெண்களும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் பெண் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன.

1. பள்ளி என்ற சொல்லின் பொருள் என்ன?
2. பள்ளி என்னும் சொல் யாவரின் கொடைகள்?
3. மேற்கண்ட பத்தியில், ஊரின் பெயர்கள் எத்தனை வந்துள்ளன?
4. கழுகுமலை கல்வெட்டின் செய்தி என்ன?
5. பள்ளிக்கூடம் பெயர் காரணம் தருக.

**அலகு-4**

குறிப்பு: i) கொடுக்கப்பட்ட சுருக்க குறிப்புகளைக் கொண்டு விரிவாக எழுதுக.

ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(1 x 10 = 10)

5. குடிமக்கள் காப்பியம் – மூவேந்தர் காப்பியம் – இயற்கையை போற்றுதல் – நீதி வழங்கல் – இரட்டை காப்பியம்.

**அலகு-5**

குறிப்பு: i) திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைக.
ii) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.
iii) கொடுக்கப்பட்ட வினாவிற்கு 300 சொற்களுக்கு மிகாமல் விடை அளிக்கவும்.

(1 x 15 = 15)

6. (அ) கேள்வி – என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை?

(ஆ) திருக்குறளில் இடம்பெறும் பொருளாதார கோட்பாடுகளை பட்டியலிடுக.

(இ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

(ஈ) உலகப் பொதுமறையான திருக்குறள் மூலம் வாழ்வின் பெருமைகளை எவ்வாறு தெரிந்து கொள்ளலாம்?

(உ) திருக்குறளில் திருவள்ளுவர் கையாண்டுள்ள உவமைகளையும் அதன் மூலம் அவர் கூறும் கருத்துக்களையும் தொகுக்க.

**அலகு-6**

குறிப்பு: i) கட்டுரை வரைதல்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.
iii) 250 சொற்களுக்கு மிகாமல் விடை அளிக்கவும்.

(1 x 15 = 15)

7. (அ) தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்தினை ஏற்று ஆட்சி மொழி முனைப்பு திட்டத்தை விரிவு படுத்தும் பொருட்டு, தலைமை செயலகத்துறைகளிலும், அரசு சார்பு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், கூட்டுறவு இணையங்கள் போன்ற அனைத்திலும் தமிழ் திட்டத்தை உடனடியாகச் செய்திட அனைத்து மாவட்ட ஆட்சி தலைவர்கள் மற்றும் அனைத்து துறைத் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கபடும் வகையில் அறிக்கை ஒன்றை எழுதிடுக.

(ஆ) மகளிருக்கான உரிமைத்தொகை திட்டம் நடைமுறைக்கு வரும் நாளினை அரசிதழில் செய்தியாக வெளியிட, தகவலை தயார் செய்க.

(இ) வட்டாட்சியர்கள் அவர்களின் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் மூடி இருப்பதை உறுதிப்படுத்த மாவட்ட ஆட்சியர் எழுதும் சுற்றறிக்கை ஒன்றை தயார் செய்க.

**அலகு-7**

குறிப்பு: i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பகுதியிலும் நான்கு வினாக்கள் உள்ளன.
ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
iii) ஒவ்வொரு பகுதிக்கும் நான்கு மதிப்பெண்.
iv) ஐந்து பிரிவுக்கும் சேர்த்து இருப்பது மதிப்பெண்.

(4x5=20)

8. பிழை நீக்கி எழுதுக:

1. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
2. ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.
3. இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.
4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

9. எதிர்மறை வாக்கியமாக மாற்றுக:
   1. சினத்தால் கேடு வரும்
   2. நீரின்றி அமையாது உலகு
   3. உருண்டையான பொருள் சுழலும்
   4. கல்விக்கு எல்லை இல்லை
10. பிரித்து எழுதுக:
    1. பூம்பாவாய்
    2. கண்டான்
    3. பாடாண்
    4. தேம்பாவணி
11. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க.
    1. கான் – காண்
    2. களம்–கலம்
    3. முன் பின்
    4. பழமை புதுமை
12. கீழ்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
    1. ஆற அமர
    2. அகலக்கால்
    3. வழிவழியாக
    4. கண்துடைப்பு